# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.19/2014

DW–3 செல்லமுத்து நாள்.27.10.2025

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு நேரடியாக தெரிந்த விசயங்களை நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன். என் தாத்தா பெயர் வெங்கடாசலம். என்சின்ன தாத்தா மலேசியா சென்றுவிட்டார். என்னுடைய தாத்தாவிற்கு வாதியின் நிலத்தை ஒட்டி நிலம் உள்ளது. என்சித்தப்பா கிருஷ்ணன் வாதியின் தாயாருக்கு ஒரு சொத்தை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மனோகரன் மகன் துரைசாமி எங்களுடைய மற்ற சொத்துக்களை ஏலத்தில் எடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பே அந்த ஏலம் நடந்துள்ளது. முழு விவரம் எனக்கு தெரியாது. தற்போது வாதி நிலத்தின் அருகில் எனக்கு சொத்துக்கள் கிடையாது. நான் 2002ம் ஆண்டில் குவைத் சென்றேன். அங்கு 2வருடம் இருந்தேன். நான் குவைத்தில் இருந்த காலத்தில் 4ம் பிரதிவாதி அங்கிருந்தார். அவர் அங்கு இருக்கும்போது எப்போதாவது சென்று நான் அவரை பார்ப்பேன். நான் வெளிநாட்டில் இருக்கும்போது என்னுடைய சம்பளபணத்தை உண்டியல் மூலமாக என் கம்பெனி மேஸ்திரி அனுப்புவார். நான் வெளிநாட்டில் சம்பாதித்து சொத்து எதையும் வாங்கவில்லை. வாதியை தெரியும். வாதி அந்த பகுதியில் நவதானியங்களை வாங்கி மொத்தமாக வியாபாரம் செய்வாரா என்று எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதி குடும்பத்தில் பூர்விக சொத்துக்கள் கிடையாது என்று எந்த அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சின்னராஜ் கொஞ்சகொஞ்சமாக சம்பாதித்து சொத்துக்களை வாங்கினார். சின்னராஜ் வண்டிமாடுகள் வைத்திருந்தார். வாடகைக்கு வண்டி ஓட்டுவார். உழவு வேலை செய்வார். அவர் முதலில் எந்த வருடம் சொத்து வாங்கினார் என்று எனக்கு தெரியாது. அதற்குமுன்பு அவர் குடும்பத்தில் சொத்துக்கள் இருந்ததா என்று எனக்கு தெரியாது. சின்னராஜ் அரசு வேலையோ அல்லது கான்டராக்ட் வேலையோ செய்யவில்லை. அ அட்டவணையில் 1 முதல் 7 அயிட்ட சொத்துக்களை

சின்னராஜ் எந்தெந்த வருடம் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினார் என்று எனக்கு தெரியாது. வாதி என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி 10வது வரை படித்துள்ளார். வாதியின் சகோதரிகள் பள்ளியில் 8, 9 வது வகுப்பு வரை படித்துள்ளார்கள். தாவா அ அட்டவணை 8வது அயிட்ட சொத்து மேட்டூரில் உள்ளது. அது மாரியம்மன் கோவில் தெருவில் உள்ளது. அந்த சொத்து வாங்குவதற்கு 4ம் பிரதிவாதி எவ்வளவு பணம் அனுப்பினார் என்று எனக்கு தெரியாது. அந்த சொத்து யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை பொறுத்து 4ம் பிரதிவாதி ஆதரவாக எழுதிகொடுக்கப்பட்ட தானபத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. அந்த பத்திரம் எழுத நான் பத்திர ஆபிஸ் செல்லவில்லை. இந்த விவரத்தை 4ம் பிரதிவாதி என்னிடம் சொன்னாரா என்றால் அவர்கள் வீட்டிற்கு செல்லும்போது சின்னராஜ் சொன்னார். 2013ம் ஆண்டு அவ்வாறு சொன்னார். 1 முதல் 6 அயிட்ட சொத்துகள் எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் கொடுத்தார் என்றால் அது பங்குக்காக எழுதி கொடுத்தார். பணம் கைமாறவில்லை. வாதி, பிரதிவாதிகளுக்குள் யாரை வைத்து பாகம் பிரித்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. சின்னராஜ் எழுதி கொடுத்துவிட்டதாக சொன்னார். சின்னராஜ் 2013ம் ஆண்டில் சொன்னார். ஐயர்குட்டையில் உள்ள தாவா 9அயிட்ட சொத்தை 2007ம் ஆண்டு கட்டினார். அதற்குமுன்பே கொஞ்சம் கட்டப்பட்டு இருந்தது. 2005ம் ஆண்டில் அது கட்டப்படவில்லை. 2004ம் ஆண்டில் கொஞ்ச அளவில் கடையாக இருந்தது. வீடு கட்டுவதற்கு பேங்க் ஆப் இந்தியாவில் நகை அடகு வைத்தார்கள். நகை எவ்வளவு அடகு வைத்தார் என்று எனக்கு தெரியாது. ரூ.7லட்சத்திற்கு நகை அடகு வைத்ததாக சொன்னார். அது சம்மந்தப்பட்ட ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை. வீடு கட்ட எவ்வளவு ரூபாய் ஆனது என்று எனக்கு தெரியாது. நித்யா நகைகளை கொடுக்கும்போது நான் பார்க்கவில்லை. கொடுத்ததாக சொன்னார்கள். வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளுக்கு எந்த அடிப்படையில் பாகம் இல்லையென்று

சொல்கிறேன் என்றால் பெண்பிள்ளைகளுக்கு நகை போட்டு கட்டி கொடுத்துவிட்டார்கள். மற்றவர்களுக்கு தனியாக சொத்தை எழுதி கொடுத்துவிட்டார்கள். பெரம்பலூரில் உள்ள சொத்தை வாங்குவதற்கு 4, 5 பிரதிவாதிகள் பணம் கொடுத்தவிவரம் எனக்கு நேரடியாக தெரியாது. வாதியின் சுகபோக வாழ்க்கைக்கு எவ்வளவு ரூபாய் பிரதிவாதி எப்போது அனுப்பினார் என்று எனக்கு தெரியாது. வாதியின் அக்கொண்டிற்கு அனுப்பியதாக சொல்லுவார். அதை நான் பார்க்கவில்லை. பெண்பிள்ளைகளுக்கு 5பவுன், 10பவுன் போட்டு கட்டிகொடுத்ததாக பெரியவர் சொன்னார். பெண்பிள்ளைகளை திருப்பட்டுரில் கட்டிகொடுத்தார்கள். நான் திருமணத்திற்கு செல்லவில்லை. 1ம் பிரதிவாதியை வாதி அடித்து துன்புறுத்திய விவரம் எனக்கு நேரடியாக தெரியும். தேதி, வருடம் தெரியாது. பங்கு எல்லாவற்றையும் வேண்டும் என்று கேட்டு சின்னராஜ் எழுதி தர முடியாது என்று சொன்னதால் இந்த சம்பவம் நடந்தது. புகார் கொடுக்க நான் காவல்நிலையம் செல்லவில்லை. நான் கூறுவதுபோன்று வாதி அவருடைய தகப்பனாரை அடித்து துன்புறுத்தவில்லை என்றால் சரியல்ல. ஊரில் எதுவும் முக்கியமான பிரச்சனை என்றால் 1ம் பிரதிவாதி போய் சரிபண்ணுவார். அந்த வகையில் அவர் பல வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. சின்னராஜ் எந்த காலத்திலும் தாவா அ அட்டவணை சொத்தில் விவசாயம் செய்யவில்லை என்றும், வாதி தான் விவசாயம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. வாதி இன்றைய தேதிவரை நவதானியம் மொத்த வியாபாரம் செய்கிறார் என்றால் சரியல்ல. வாதி அவர் வியாபாரத்தின் மூலம் வந்த வருமானத்தின் மூலம் மற்றும் விவசாய வருமானத்தை வைத்து தான் அவருடைய சகோதரிகளுக்கு திருமணம் செய்துவைத்தார் என்றால் சரியல்ல. வாதியின் சகோதரிகளுக்கு 5, 10 பவுன் நகை போடவில்லை என்றும், தோடு, மூக்குத்தி மட்டும் தான் போட்டார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பூர்விக சொத்தை கிரயம் செய்து கொடுத்துவிட்டு முதல்முதலில் 1968ல் சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. அவருடைய மற்றும் வாதியின்

பூர்விக சொத்துக்களில் உழைப்பின் மூலம் வந்த வருமானம் மற்றும் 4ம் பிரதிவாதி வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தை வைத்து அ அட்டவணை சொத்துக்கள் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. சொத்துகள் சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்த விவரம் தெரியும். ஒருதடவை நடந்தது. வருடம் ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதிக்கு தொண்டைபகுதியில் கேன்சர் இருந்தது. அது எந்த வருடம் என்று தெரியாது. அவர் வைத்தியம் பார்க்கும்போது 4ம் பிரதிவாதி வெளிநாட்டில் இருந்தார் என்றால் அவர் வந்துபோய் வைத்தியம் பார்த்தார். வாதியும் அவர் சகோதரியும் சேர்ந்து சென்னையிலும், திருச்சியிலும் வைத்தியம் பார்த்தார்கள் என்றும், 4ம் பிரதிவாதி கேள்விபட்டு தான் வந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மருத்துவமனையில் திடீரென்று இறத்தால் தான் பிரேத கூராய்வு நடந்தது என்றும், பிரேதகூராய்வு நடக்கும் அளவிற்கு வாதி எந்தவிதமான செயலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறும் வாதியின் ஆடம்பர செலவுக்கு எந்த வருடம் முதல் 4ம் பிரதிவாதி பணம் அனுப்பவில்லை என்றால் 2013ம் ஆண்டிலிருந்து அனுப்பவில்லை. இந்தவிவரம் எனக்கு நேரடியாக தெரியும். தாவா சொத்துக்கள் வாதி , 1ம் பிரதிவாதி மற்றும் 4ம் பிரதிவாதியின் வருமானத்தை வைத்து வாங்கப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும், அவை 4ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியாது என்றும், 4ம் பிரதிவாதி சொல்லிக்கொடுத்தப்படி அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல. என்னுடைய வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் இடையே சுமார் 2 1/2 கி.மீ தூரம் இருக்கும். தாவா சொத்தின் அனுபவம் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.